செ.வெ.எண்.05 நாள்: 04.04.2019

தூத்துக்குடி மாவட்ட முன்னாள் படைவீரர்கள் நடைபெற உள்ள பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபட தங்கள் விருப்பத்தினை, முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் தெரிவிக்கலாம்- மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தூத்துக்குடி மாவட்டத்தில் 18.4.2019 அன்று நடைபெற உள்ள பாராளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் விளாத்திகுளம் சட்டமன்ற இடைத்தேர்தலில் தேர்தல் பாதுகாப்பு பணிக்கு அதிகளவில் முன்னாள் படைவீரர்களை ஈடுபடுத்திட இருப்பதால் தூத்துக்குடி மாவட்டத்தைச் சார்ந்த திடகாத்திரமுள்ள முன்னாள் படைவீரர்கள், (முன்னாள் இளநிலை படை அலுவலர் (JCO) மற்றும் இதர முன்னாள் படைவீரர்கள் (OR)) தங்கள் விருப்பத்தினை, டூவிபுரம் 8வது தெரு, தூத்துக்குடி-3ல் அமைந்துள்ள முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தை நேரில் தொடர்பு கொண்டு தெரிவித்திட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் விவரங்களுக்கு உதவி இயக்குநர் முன்னாள் படைவீரர் நலன், தூத்துக்குடி, அவர்களை நேரில் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.